**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**நாள்.13.11.2025**

**O.S. No. 20/2016**

**பி.வா.சா. 1- நவநீதகிருஷ்ணன்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் மற்றும் மினி பஸ் சொந்தமாக வைத்துள்ளேன். அரசியல் கட்சியில் எதுவும் இருக்கிறேனா என்றால் ஆமாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சங்கரன்கோவில் ஒன்றிய எம்ஜிஆர் மன்ற செயலாளராக இருக்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது சங்கரன்கோவில் நிலவள வங்கியில் தலைவராக இருந்தேனா என்றால் இல்லை தலைவராக போட்டி போட்டேன். எனக்கு தமிழ் நன்கு எழுதப் படிக்கத் தெரியும் என்றால் சரிதான். வழக்குச் சொத்து பெரும்பத்தூர் கிராம சர்வே எண்.220/6 ல் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.220/6 ல் சர்வே எண்.220/4 க்கு பாத்தியப்பட்ட கிணறு உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.220/6 மற்றும் சர்வே எண்.220/4 ல் உள்ள கிணறு பாத்தியதையை கணேசன் என்பவர் வாதிக்கு 2013 ல் கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். கணேசன் யாரிடம் கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. வாதி கிரையம் வாங்கிய விபரம் எனக்கு 2013 ம் ஆண்டில் தெரியுமா என்றால் ஆமாம் தெரியும். வாதி கிரையம் வாங்கிய பிறகு நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான் 2016 அல்லது 2017 ல் நான் கிரையம் வாங்கினேன். சர்வே எண்.220/6 ல் நான் எந்த சொத்தையும் கிரையம் வாங்கவில்லை சர்வே எண்.220/3 ல் தான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சர்வே எண் எனக்கு சரியாக தெரியவில்லை. சர்வே எண்.220/6 க்கு ஒட்டுமொத்த சொத்துக்கு கிழக்குப் பக்கத்தில் என்ன உள்ளது என்றால் சர்வே எண்.220/6 க்கு ஒட்டுமொத்த சொத்துக்கு கிழக்குப் பக்கத்தில் என்ன உள்ளது என எனக்குத் தெரியாது ஆனால் வாதி இடத்திற்கு கிழக்குப் பக்கம் நான் இடம் வாங்கியுள்ளேன். சர்வே எண்.220/6 க்கு தென்பக்கம் ஆவுடையம்மாள் இடம் உள்ளது என்றால் தெரியாது. சர்வே எண்.220/6 க்கு மேற்குப் பக்கம் செல்லம்மாள் இடம் உள்ளது என்றால் தெரியாது. சர்வே எண்.220/6 க்கு வடக்கில் யார் இடம் உள்ளது என்றால் தெரியாது.

நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு நான்கு பக்க எல்கைகள் என்ன என்றால் கிழக்கு ரோடு, வடபுறம் மாடன் வகையறா, மேல்பக்கம் வாதி காளிமுத்து கிரையம் பெற்ற இடம், தென்பக்கம் சரியாக ஞாபகமில்லை. நான் கணபதியிடம் ஒரு சொத்தை தான் கிரையம் பெற்றேனா, வேறு சொத்தை வாங்கியுள்ளேனா என்றால் நான் கணபதியிடம் ஒரு சொத்தை தான் கிரையம் பெற்றேன். நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு தென்வடல், கிழமேல் அளவு என்ன என்றால் 27 செண்ட் வாங்கினேன் தென்வடல், கிழமேல் அளவு தெரியாது. வாதி நான் கிரையம் வாங்கிய கணபதிக்கு எதிராக சங்கரன்கோவில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வஎண்.191/2014 வழக்கினை சொத்திற்கு இடையூறு செய்வதாக தாக்கல் செய்திருந்தார் என்றால் தெரியாது. வாதி நான் கிரையம் வாங்கிய கணபதிக்கு எதிராக சங்கரன்கோவில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வஎண்.191/2014 வழக்கினை தாக்கல் செய்திருந்தார் என்ற விபரத்தை தற்போது தெரிந்துகொண்டேனா என்றால் சுமார் 1 வருடத்திற்கு முன்பாக தெரிந்து கொண்டேன் அந்த வழக்கில் வாதியும் கணபதியும் ஒன்று சேர்ந்துகொண்டு கணபதி ஒருதலைபட்சமாகிவிட்டதாக கேள்விப்பட்டேன். வாதி காளிமுத்து தாக்கல் செய்த அ.வஎண்.191/2014 வழக்கின் தீர்ப்பு என்னைக் கட்டுப்படுத்தாது என நான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். அ.வஎண்.191/2014 வழக்கில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை என்னைக் கட்டுப்படுத்தாது செல்லாது என எதிர்வழக்குரையில் எதிர்கோரிக்கை பரிகாரம் எதுவும் நான் கேட்கவில்லை என்றால் சரிதான். அ.வஎண்.191/2014 வழக்கின் தீர்ப்பு முழுமையான விசாரணைக்குப் பிறகு பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு, நான் சொல்வதுபோல் ஒருதலைபட்ச தீர்ப்பு கிடையாது என்றும், மேற்படி விவரம் எனக்கு நன்கு தெரியும் அதை ஒத்துக்கொண்டால் எனது வழக்கிற்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதால் உண்மைக்குப் புறம்பாக ஒருதலைபட்ச தீர்ப்பு என கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. அ.வஎண்.191/2014 வழக்கின் தீர்ப்பு நான் கிரையம் பெற்ற கணபதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டிருப்பதால் அ.வஎண்.191/2014 வழக்கின் தீர்ப்பு என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல.

தாவா சொத்து மற்றும் அதனுடன் சேர்ந்த சொத்துக்கள் ஆதியில் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் தெரியாது. தாவா சொத்து ஆதியில் மாடத்தி என்பவருக்குப் பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. எனது எதிர்கோரிக்கையில் தாவா சொத்து ஆதியில் மாடத்தி என்பவருக்குப் பாத்தியப்பட்டது என தெரிவித்திருப்பது தெரிந்து சொன்னேனா, அல்லது தெரியாமல் சொன்னேனா என்றால் வழக்கறிஞரிடம் ஆவணங்களை ஒப்படைத்துவிட்டேன் அதனால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. எனது எதிர்கோரிக்கையில் சொல்லியுள்ள மாடத்தியின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாடத்தியின் கணவர் பெயர் என்ன என்றால் தெரியாது. மாடத்திக்கு எத்தனை ஆண் மக்கள், எத்தனை பெண் மக்கள் என்றால் தெரியாது. வழக்குச் சொத்துடன் சேர்ந்த சொத்துக்களை மாடத்தியின் வாரிசுகள் எப்படிப் பிரித்துக்கொண்டார்கள் என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 முதல் 10 ஆவணங்கள் பற்றி என்னிடம் கேள்விகள் கேட்டால் என்னால் சொல்ல முடியுமா என்றால் முழுமையாக சொல்லமுடியாது நான் தான் ஆவணங்களை எடுத்துக் கொடுத்தேன். எதிர்கோரிக்கையில் கண்ட சொத்தினை நான் உண்மையான உரிமையாளரிடம் இருந்து கிரையம் வாங்கவில்லை அதனால் தான் என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 முதல் 10 ஆவணங்கள் பற்றி எனக்கு முழுமையாக தெரியவில்லை என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.1 முதல் 10 ஆவணங்கள் எனது தரப்பு வழக்கிற்கு உதவிகரமாக இருக்காது என்றால் சரியல்ல உதவியாகத்தான் இருக்கும். என்னிடம் காட்டப்படும் என்னால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்கோரிக்கையில் 8 வது பக்கத்தில் 10 வது வரியிலிருந்து என்ன சொல்லப்பட்டுள்ளது என என்னால் படிக்க முடியுமா என்றால் சாட்சி எதிர்கோரிக்கையை பார்த்து கீழ்கண்ட சங்கதிகள் உள்ளதாக வாசித்துக் காண்பித்தார் “ அதன்பின் பாலாறு மக்களான கசமுத்துவும், கணபதியும் வாய்மொழி பாகம் செய்துகொண்டதில் மேற்படி புல எண்கள்.220/2 மற்றும் 220/5 ல் கண்ட சொத்தில் முறையே கிழக்கு பக்கம் கணபதிக்கும், அதற்கு மேற்கு பக்கம் உள்ள சொத்து

கசமுத்துவிற்கு என்று பாகம் செய்து கொண்டு அனுபவம் செய்து வந்தநிலையில்". மேற்கண்டவாறு என்னிடம் காட்டப்படும் என்னால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்கோரிக்கையில் சொல்லிய விவரங்கள் சரியானது என்றால் சரியானது தான். சர்வே எண்.220/2 மற்றும் 220/5 ல் பாலாறு மக்களான கசமுத்துவுக்கும் கணபதிக்கும் உரிமை இருப்பதாக கட்சி செய்துவிட்டு எதிர்கோரிக்கை தபசில் சொத்தான சர்வே எண்.220/6 மற்றும் 220/3 ல் நான் கிரையம் பெற்றிருப்பது தவறு என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்திற்குப் பிறகு அரசாங்கத்தில் பெறப்பட்ட பட்டா, வரி ரசீது எதுவும் என் பெயருக்கு கிடையாது என்றால் நான் வாங்கியவர் பெயருக்கு பட்டா உள்ளது என் பெயருக்கு மாற்றப்படவில்லை நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருப்பதால் பட்டா மாற்றப்படவில்லை. இந்த வழக்கு 2016 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது நான் 2013 ல் சொத்தைக் கிரையம் வாங்கிவிட்டேன் 2013 முதல் 2016 வரை என் பெயருக்கு பட்டா மாற்றப்படவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு நான் கிரையம்பெற்ற சொத்துக்கான வில்லங்கச் சான்றிதழ் போட்டுப் பார்த்தேனா என்றால் ஆமாம் பார்த்தேன் சரியாக இருந்தது. நான் சொல்லக்கூடிய வில்லங்கச் சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் கையில் தான் உள்ளது தேவைப்பட்டால் தாக்கல் செய்யலாம். என்னால் எடுக்கப்பட்ட வில்லங்கச் சான்றிதழில் வாதி கிரையம் பெற்ற விவரம் தெரியவந்ததா என்றால் வாதி கிரையம் பெற்ற பதிவு அந்த வில்லங்கச் சான்றிதழில் இல்லை. வாதி கிரையம் பெற்ற பதிவு அந்த வில்லங்கச் சான்றிதழில் இருந்தது என்றும், அந்த விவரம் எனக்கு தெரியும் என்றும், மேற்படி விவரங்கள் நீதிமன்றத்திற்கு தெரியவந்துவிடும் என்பதால் என்னால் எடுக்கப்பட்ட வில்லங்கச் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.11.13 17:36:42 +0530